**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 14.10.2025

**அசல் வழக்கு எண்.28/2018**

**வா.சா.1 – தமிழ்செல்வி, க/பெ.வாசு**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

உங்களுக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றால் இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள் ஒரு மகன் மற்றும் ஒரு மகள் ஆவார். உங்கள் கணவர் உயிருடன் இருந்த பொழுது உங்கள் மகன் தமிழ்வாணன் அவரை கத்தியால் தாக்கிவிட்டதாக ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அது குடும்ப பிரச்சனையாகும். நீங்கள் உங்கள் மகனுடன் வசித்து வந்தீர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கானது தாக்கல் செய்து அவர் இறந்த பிறகு தான் உங்களுக்கு வழக்கின் விவரம் தெரியும் என்றால் சரி இல்லை. அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே வழக்கின் விவரம் எனக்கு தெரியும். உங்களிடம் காட்டப்படுகின்ற வழக்குரையில் உள்ள கையொப்பம் உங்கள் கணவருடைய கையொப்பம் என்றால் சரிதான். முதல் பக்கத்தில் உள்ள கையொப்பம் அவருடையது தான் மற்ற கையொப்பங்கள் அவருடையது கிடையாது. உங்களிடம் காட்டப்படுகின்ற பைசல் ரசீதில் உள்ள கையொப்பம் என்னுடைய கணவருடையது கிடையாது. உங்கள் கணவருக்கும் உங்கள் மகனுக்கும் பிரச்சனை ஏற்பட்ட காலத்தில் நீங்கள் பிரிந்து இருந்த காலத்தில் பணத்தைப் பெற்றுக் கொண்டு உங்கள் கணவர் பைசல் ரசீது எழுதிக் கொடுத்து விட்டார் மேற்படி சங்கதிகள் தெரியாமல் நீங்கள் இந்த வழக்கை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் வழக்கில் கோரிய வட்டித்தொகை அதிகமானது ஆகவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியில்லை. அடமான தொகை பைசல் ஆகிவிட்டதால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியில்லை. உங்களுடைய கணவருடைய கையொப்பங்களை வேண்டுமென்றே வழக்கிற்காக அவருடையது இல்லை என்று மாற்றி சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. பைசல் ரசிதில் உள்ள கையொப்பத்தை வேண்டுமென்று அவருடையது இல்லை என்று நீங்கள் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.